வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 239/2021

வழக்கு சாட்சி LW1 / PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகம்மாள் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கலைமணி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 65 |

தேதி 05.04.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

ராணி எனது வீட்டிற்கு வரும்போதே மூன்று குழந்தைகள் இருந்தனர் என்றால் ஆமாம். கலைமணி வேலை செய்த இன்ஜினியர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இன்ஜினியர் பெயர், முகவரி தெரியுமா என்றால் தெரியாது. நான் யாரிடம் எந்த வருடம் சீட்டு கட்டினேன் என்றால் வீட்டின் அருகில் உள்ள சிங்காரத்திடம் வருடம் ஞாபகம் இல்லை. எனக்கு ஐந்து பிள்ளைகளில் எத்தனை பிள்ளைகளை மனப்பாக்கத்தில் ஹாஸ்டலில் விட்டேன் என்றால் மூன்று பிள்ளைகள். வேணு, அன்பு, செல்வம் அவர்கள் பெயர். இரண்டு பிள்ளைகளை நான் வெளிநாட்டில் தத்து கொடுத்தேன் என்றால் இல்லை. ஹாஸ்டலில் இருந்த இரண்டு பிள்ளைகளை நான் விற்றுவிட்டேன் என்றால் இல்லை. அதனால் தான் எனக்கும், எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு நானும், எனது பிள்ளைகளும் சேர்ந்து அவரை அடித்து வீட்டைவிட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் இல்லை. நான் கூறும்விதத்தில் கலைமணிக்கும், ராணிக்கும் எந்த தவறான உறவும் கிடையாது என்றாலும், இருவருக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. கலைமணிக்கு எங்கு சொத்து உள்ளது என்றால் திருவண்ணாமலையில் பூர்வீக சொத்து உள்ளது. காட்டாங்குளத்தூரில் அவருக்கு சொத்து உள்ளது என்றால் அது எனது அம்மா அவருக்கு வாங்கி கொடுத்தது. எனது ஊர் எது என்றால் மயிலாப்பூர். காட்டாங்குளத்தூரில் இருந்த சொத்தை விற்று எனது கடைசி மகன் கண்ணன் நானும் எனது குடும்பத்தாரும்தான் கிரைய தொகையை ரூ. 6 லட்சத்தையும் எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் கலைமணி, ராணிமீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் கலைமணிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும்,

எனது மகன்களுக்கும் பயந்துதான் அவர் ஊரைவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கானது பொய்யாக எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**